DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C.No.23/2024 |
| Deposition of witness | : | P.W-1 |
| Name | : | கார்த்திகேயன் |
| Father's /Husband Name | : | உத்திராபதி |
| Village | : | செதளபதி கூத்தனூர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 57 |
| Occupation | : | விவசாயம் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28th day May 2025.
Accused A1 to A4 present.

**முதல் விசாரணை :-**

ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 02.01.2022 -ம் தேதி இரவு 08.00 மணிக்குமேல் நான் எனது வீட்டு வாசலில் இருந்தேன். அப்போது ஆஜர் எதிரிகள் நான்குபேரும் மற்றும் மூன்று நபர்களை அழைத்து வந்தார்கள். கூத்தனூரில் எனது மனைவி பெயரில் உள்ள நஞ்சை நிலத்தை பத்திரப்பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். எதிரிகள் நான்குபேரிடம் எனக்கு பணம் ரூபாய் ஒரு இலட்சம் வரவேண்டி இருக்கிறது என்று சொன்னேன். அதற்கு எதிரிகள் நான்கு பேரும் பணம் எல்லாம் கொடுக்க முடியாது பத்திர பதிவு செய்து கொடுக்க முடியாது என்றால் உன்னை நாய் அடிப்பது போல் அடித்துவிடுவேன். நீ ஒரு ஆம்பல தானடா உள்ளபோய் எதற்கு தாப்பலா போட்டு இருக்கிற நீ ஒரு ஆம்பலயா இருந்தா வெளியே வாடா என்று கத்தினார்கள். அப்பொழுது எதிரி முகமது ராசித் நீ ஒரு கோசா பய என்று அசிங்கமாக கூறினார். எதிரிகள் நான்கு பேரும் கத்தியை வைத்துக்கொண்டு கொன்றுவிடுவதாக மிரட்டினார்கள் அதனால் எனக்கு பயம் ஏற்பட்டது. மற்ற எதிரிகள் சங்கர் மற்றும் கதிர்வேல் ஆகியோர்கள் நீ என்ன வேனாலும் செய் நான் கத்திய எடுத்து குத்திட்டு எவ்வளவு வேணாலும் செலவு பன்றன் என்று சொன்னார்கள். அதற்கான சி.சி.டி.வி பதிவுகள் என்னிடம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியும். இதுசம்பந்தமாக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி பேரளம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரில் போலிசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம்

என்னுடையது தான். அந்த புகார் மனு நான் கொடுத்தது தான். அந்த புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**:-

சம்பவம் நடந்த அன்றே நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை மறுநாள் காலை புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரில் போலிசார் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும், புகாரிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு என்ன காரணம் என்றால் நிலப்பிரச்சனை காரணம். அந்த நிலமானது தர்மராஜன் மனைவி ஜெயலெட்சுமிக்கு சொந்தமானது என்றால் சரிதான். அந்த நிலத்தை 1997-ம் ஆண்டு ஜூலை மாதம் 17-ம் தேதி ஜெயலெட்சுமி ஆறுமுகம் என்பவருக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை நான் தான் எழுதிக்கொடுத்தேன். எந்த உரிமையின் அடிப்படையில் எழுதிக்கொத்தேன் என்றால் சாகுபடி செய்து வந்த உரிமையில் எழுதிக்கொடுத்தேன். 2017-ம் வருடம் ஐயரிடமிருந்து நான் வாங்கிவிட்டேன். 23.11.2017-ம் தேதி வாங்கினேன். எதிரிகள் இவ்வழக்கு தொடர்பாக சிறைக்கு சென்று வந்த உடன் மேற்படி சொத்தை கதிர்வேல் முருகனுக்கு எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். 1997-ம் ஆண்டு முதல் மேற்படி சொத்தை எதிரிகள் தரப்பில் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.28 05:03:43 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C.No.23/2024 |
| Deposition of witness | : | P.W - 2 |
| Name | : | ராகுல் |
| Father's /Husband Name | : | ராமகிருஷ்ணன் |
| Village | : | செதளபதி கூத்தனூர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 25 |
| Occupation | : | பட்டதாரி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28th day May 2025.
Accused A1 to A4 present.

**முதல் விசாரணை :-**

கடந்த 02.01.02022-ம் தேதி இரவு 08.30 மணியளவில் அ.சா.1 வீட்டு வாசலில் யாரோ சத்தம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. என்ன சத்தம் போட்டார்கள் என்று எனக்கு தெரியாது. நிலப்பிரச்சனை தொடர்பாக பேசினார்கள். பிறகு எதிரிகள் நான்கு பேரையும் நான் விலக்கி வைத்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 02.01.2022ம் தேதி இரவு 08.00 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டு வாசலில் இருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் நான்குபேரும் அ.சா.1-ஐ பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரிகள் நான்குபேரும் அ.சா.1-ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்றும், எதிரிகள் நான்குபேரும் அ.சா.1-ஐ கையால் அடித்தார்கள் என்றும், 1-வது எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு அ.சா.1ஐ கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள் என்றும்,

சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிாசர் விசாரிக்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.05.28 05:03:50 +0530

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C.No.23/2024 |
| Deposition of witness | : | P.W - 3 |
| Name | : | மனோகர் |
| Father's /Husband Name | : | காத்தமுத்து |
| Village | : | செதளபதி கூத்தனூர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 65 |
| Occupation | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28th day May 2025.
Accused A1 to A4 present.

**முதல் விசாரணை :-**

அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 02.01.02022-ம் தேதி இரவு 08.30 மணியளவில் நான் வேலை முடித்து வந்தபோது சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள் யார் யாரிடம் சண்டைபோட்டார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை :**

கடந்த 02.01.2022ம் தேதி இரவு 08.00 மணியளவில் அ.சா.1 அவரது வீட்டு வாசலில் இருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் நான்குபேரும் அ.சா.1-ஐ பார்த்து அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், எதிரிகள் நான்குபேரும் அ.சா.1-ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்தார்கள் என்றும், எதிரிகள் நான்குபேரும் அ.சா.1-ஐ கையால் அடித்தார்கள் என்றும், 1-வது எதிரி கையில் கத்தியை வைத்துக்கொண்டு அ.சா.1ஐ கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார்கள் என்றும், சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும், போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் போலிசார்

விசாரிக்க வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், போலிசார் விசாரிக்கவில்லை என்று எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C.C.No.23/2024 |
| Deposition of witness | : | P.W-4 |
| Name | : | ராஜவேல் |
| Father's /Husband Name | : | சம்பந்தம் |
| Village | : | செதளபதி கூத்தனூர் |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 49 |
| Occupation | : | ஓட்டுனர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 28th day May 2025.
Accused A1 to A4 present.

**முதல் விசாரணை :-**

தற்போது என்னிடம் காண்பிக்கப்டும் பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியளிக்கப்பட்டது)

**அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை** :

கடந்த 05.01.2022ம் தேதி காலை 09.00 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடம் அருகே நான் இருந்த போது பேரளம் போலிசார் சம்பவ இடத்தை என் முன்னிலையில் பார்வையிட்டார்கள் என்றும், பார்வை மகஜர் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும், அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றும், போலிசார் என்னிடம் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**:-

வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.